**தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) மீண்டமும் செலவினம்

நிதிக்கூற்றுக்களில் மீண்டெமும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் மாதாந்த கணக்குப் பொழிப்பிற்கும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பிற்கும் இடையே ஒரு செலவின விடயத்தில் ரூபா 369,271 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மாவட்ட செயலகத்தின் மாதாந்த இறுதிக் கணக்குப் பொழிப்பிற்கும் திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றில் பதியப்பட்ட செலவினத்திற்கும் இடையேயுள்ள இணக்கமின்மைகள் சீராக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் 266/2018 இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் ஊடாக தவறு சரி செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | திம்புலாகல பிரதேச செயலகத்தில் 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 499,224 தொகையான பொறுப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் பொறுப்புக்கள் குறிப்பாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |

வேண்டும்.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஒன்றிணைந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் ஏனைய பல்வேறு அரசாங்கத்தின் அமைச்சுக்கள் / திணைக்களங்களில் தீர்க்கப்பட வேண்டிய கடன் மீதியின் கீழ் லங்காபுர பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 241,772 தொகையான கடன் மீதி காண்பிக்கப்பட்டிருந்தும், லங்காபுர பிரதேச செயலகத்தில் தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றில் அவ்வாறான கடன் மீதியொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ்செய்து கணக்கு மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | லங்காபுர பிரதேச செயலகம் சமர்ப்பித்துள்ள இணக்கக்கூற்றின் 3.9 என்ற பட்டோலையின் கீழ் காண்பிக்கபிக்கப்பட்டுள்ளது. |

**(இ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்களைச் செலுத்துதல் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 6000-0-0-17-0030 என்ற வைப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் மாதாந்த கணக்குப் பொழிப்பினதும் நிதிக்கூற்றுக்களினதும் பிரகாரம் ரூபா 134,259 மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு வைக்கும் முறைமை சரி செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏ.சீ.ஏ.6 படிவத்தில் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதியின் சரியான கூட்டுத்தொகை ரூபா | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | 1,231,513,599 ஆக இருந்த போதிலும், அக்கூட்டுத்தொகை ரூபா 1,138,813,599 ஆக கொண்டுவரப்பட்டிருந்தது. | | |
| (ii) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி ரூபா 1,031,626,754 ஆகக் காணப்பட்ட போதிலும், 2018 சனவரி 01 ஆந் திகதியில் அந்த மீதி ரூபா 1,138,813,599 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் இறுதி மீதியை மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் ஒப்பீடு செய்ய வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |

**1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 3.11 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு நோக்கங்களை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலொன்று வழங்கப்பட்டிருக்க வில்லை. |

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தி | - | மாவட்ட செயலகத்திற்குரிய 03 அரசாங்க விடுதிகளின் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சி குடியிருக்கின்ற 03 உத்தியோகத்தர்கள் தொடர்பில் 1996 இன் 07 ஆம் இலக்க அரசாங்க விடுதிகள் (உரித்தை மீள பெறல்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட வெளியேறுதல் அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்த போதிலும், விடுதிகளின் உரித்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தியின் பிரகாரம் விடுதிகளின் உரித்தை மாவட்ட செயலகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பந்தி | 138,535 | வாடகைக் காலத்தை விஞ்சி அரசாங்க விடுதிகளில் குடியிருக்கின்ற காலப்பகுதிக்காக மாவட்ட செயலகத்தில் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து தண்ட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் தண்ட வாடகை அறவிடுவதற்கு | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்க வேண்டும் | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை ---------------------------- | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 66, 69 | 1,238,647 | மாவட்ட செயலகத்தால் 2018 ஆம் ஆண்டின் போது 275-1-1-0-2102 மற்றும் 275-1-1-0-1409 என்ற செலவின விடயங்களுக்காக வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 511,803 தொகை 275-1-1-0-2002 என்ற செலவின விடயத்திலும், 275-1-1-0-1301 என்ற செலவின விடயத்திற்கான வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 558,013 கூட்டுத்தொகையான செலவினம் 275-1-1-0-2003 என்ற செலவின விடயத்திலும், 275-1-1-0-1409 என்ற செலவின விடயத்திற்காக வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 168,831 தொகையான செலவினம் 275-1-1-0-1301 செலவின விடயத்திலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் செலவிடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 66, 69 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சரியாக பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(4) | 669,630 | வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களுக்குரிய 02 கெப் வண்டிகளுக்கு 03 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட விபத்துக்களின் நட்டம் தொடர்பாக மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மூன்று மாதத்திற்குள் பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரியாக பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 237 | 193,000 | நிதிப்பிரமாணம் 237 இற்கு முரணானதாக திம்புலாகல பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட 08 | நிதிப்பிரமாணம் 237 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் | உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயற்திட்டங்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 103,000 தொகையான வேலை மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செக்குப்பிடிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90,000 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | து. |
| (iv) | நிதிப்பிரமாணம் 315(1) | - | தேவையான நடவடிக்கைகள் எடுக்காமல் திம்புலாகல பிரதேச செயலகத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற பணம் 07 நாட்கள் காலம் அலுவலக காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 315(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்து கொள்வதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (v) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 937,230 | உப கட்டுநிதி வழங்குதல் பதவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரமாக இருக்க வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தால் 2018 ஆம் ஆண்டில் 57 சந்தர்ப்பங்களின் போது ரூபா 937,230 தொகை பதவிநிலையற்ற உத்தியோகத்தருக்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 371(2)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உபகட்டு நிதி வழங்குதல் பதவிநிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டும். | பதவிநிலை உத்தியோகத்தர் வரையறுக்கப்பட்டமையினால் அவர்களின் மேற்பார்வையின் கீழ் பதவி நிலையல்லாத உத்தியோகத்தருக்கும் கட்டுநிதி வழங்கப்படுகின்றது. |
| (இ) | 2016 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | மாவட்ட செயலகம் மற்றும் திம்புலாகல, வெலிகந்த, மெதிரிகிய, எலஹெர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகங்களில் 2018 ஆம் ஆண்டின் போது எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ஈ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 02/2017 | - | ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தின் 04 வாகனங்கள், வெலிகந்த பிரதேச செயலகத்தின் 06 டெக்டர் பவுசர்கள், லங்காபுற பிரதேச செயலகத்தின் 05 வாகனங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகத்தின் 05 | சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் உரிய நிறுவனத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனங்கள் உரிய நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | |
| (உ) | 2008 ஆகஸ்ட் - 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் திணைக்கள சுற்றறிக்கையின் 1.3.3(6) ஆம் பந்தி | எலஹெர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் காணிக் கச்சேரி நடாத்தப்பட்டிருந்த போதிலும், 75-251 நாட்களுக்கிடையிலான கால தாமதத்தின் பின்னர் ஆரம்ப நிரற்படுத்தல் பட்டியல் ஆட்சேபனைக்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. | காணிக் கச்சேரி நடாத்தி ஆரம்ப தெரிவுப் பதிவேடு 14 நாட்களுக்குள் ஆட்சேபனைக் காக பகிரங்கப்படுத்தி ஆட்சேபனை பெற்றுக்கொள்ள ப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தின் 02 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பவர்களிடமிருந்து ரூபா 47,815 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் இல்லங்களுக்கான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ஆ) | மாகாண அரச சேவைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திம்புலாகல பிரதேச செயலகத்தின் கணக்காளரின் நிரற்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்த, முன்னாள் பிரதேச செயலாளரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த விடுதி வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் இல்லங்களுக்கான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |

### 2.2 செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்குதலும் தீர்த்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெலிக்கந்த பிரதேச செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரமாணங்களுக்கு முரணாக 03 சந்தர்ப்பங்களின் வேறு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 தொகையை விஞ்சி செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையின் போது ரூபா 100,000 தொகையை விஞ்சி உப கட்டுநிதி வழங்கப்பட முடியாது | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம் |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட செயல்நிமித்த உப கட்டுநிதி பணிகள் நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 43 சந்தர்ப்பங்களின் போது மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,645,582 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்படும் போது 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையிலான காலவீச்சில் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | பணிகள் நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் பெறப்பட்ட உப கட்டுநிதிப் பணம் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம் |

### 2.3 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட எலஹெர பிரதேச செயலகத்தின் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் ரூபா 36,439 பெறுமதியான இனங்காணப்படாத 06 கொடுப்பனவுகள் காணப்பட்டன. | காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம் |

**2.4 முற்பணக் கணக்கு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மாகாண சபை நிறுவனத்திற்காக மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 582,060 கடன்மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கப்பட வேண்டும். | கடன் பணத்தை தீர்த்து வைக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மரணமடைந்த மற்றும் ஒய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 494,221 தொகை காணப்பட்டது | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | ரூபா 254,645 தொகையான மீதியை நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் பதிவழிப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 87,476 மீதி அறவிடப்பட்டிருந்த துடன் கணக்கு பதிவுகளின் மூலம் தீர்க்கப்படவில்லை. |
| (இ) | வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த 04 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,164,963 கூட்டுத்தொகையான கடன் மீதி காணப்பட்டது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைக்கடன் மீதியை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | இணக்கக்கூற்றின் பிரகாரம் வேலையை விட்டுச் சென்ற 05 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 318,336 ஆக இருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 167,144 தொகை நிலுவை கடன் மீதிக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 86,783 மீதியை பிணையாளிகளின் மூலம் அறவிடுவதற்கும் ரூபா 64,409 தொகையான மீதி அறவிடப்படுவதாகவும் |

அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எலஹெர பிரதேச செயலகத்தில் 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 176 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் திட்டமிடப்பட்ட சகல செயற்றிட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டம் அங்கீகரிக்கப்படாமை மற்றும் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொங்கிறீட் சிறு கற்கள் பதிக்கும் 04 செயற்திட்டங்களின் கற்களுக்கான தரப் பரிசோதனை அறிக்கை பெறப்படாதிருந்ததுடன் பதிக்கப்பட்டிருந்த கற்கள் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்பட்டது. | தரப் பரிசோதனை அறிக்கை பெற்று உரிய ஈடுபடுத்தல்களில் தரத்தன்மை தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டும். | 10 தொன்களை விஞ்சி பாரம் ஏற்றிச் செல்லப்பட்டமையால் வீதிக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன் அதனை நல்ல நிலைக்கு கொண்டு வரப்பட்டள்ளது. |
| (ஆ) | உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 6,726,466 தொகை செலவில் வெலிகந்த பிரதேச செயலகத்தால் 02 குளங்களில் பாசி அகற்றப்பட்டிருந்த போதிலும், சகல பாசிகளையும் அகற்றுவதற்கு முடியாமையின் அடிப்படையில் மீண்டும் விரைவாக பாசி பரவும் ஆபத்து காணப்பட்டது. | எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | மனித ஊழியத்தைப் பயன்படுத்தி பாசியை அகற்றுவதற்கு ஏற்பட்டிருந்தமையால் எல்லாவற்றையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் பயிர்ச் செய்கை | செயற்திட்டத்தை ஆரம்பித்து அதன் | பயனாளிகளிடமிருந்து உரிய பணத்தை மீள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | கிணறுகளை அமைப்பதற்காக ரூபா 20,000 வீதம் 44 நலனாளிகளுக்கும் மாட்டுப் பண்ணைகளை அமைப்பதற்காக ரூபா 17,240 பெறுமதி வீதம் 04 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பொருள் உதவிகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. | விளைவுகளைப் பெறும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | லங்காபுற பன்சல்கொடெல்ல நகரத்தில் பொது மலசலகூடம் ரூபா 582,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் நுழைவு வீதியொன்று காணப்படாமையினால் பொது மக்களுக்கு பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் காணப்படாதிருந்ததுடன் இரண்டு அலகுகளைக் கொண்ட இந்த மலசலகூடத்தில் ஒரு பிரிவு பூட்டு இட்டு மூடப்பட்டிருந்தது. | பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்து பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான உரித்து லங்காபுர பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. |
| (உ) | மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பூதுர் வீதியில் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் செயற்றிட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டவைகளுக்கிடையில் ரூபா 1,160,676 தொகையான வேலை நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக அந்த வேலைக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. | நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். | உரிய பிரிவின் மூலம் தகவல்கள் பெறப்பட்டு சமர்ப்பிப்பதற்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. |

## 3.3 உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | நிதிப்பிரமாணம் 119 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பணம் அறவிடல் மற்றும் | நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப் படாதிருந்ததுடன் மதிப்பீட்டின் பிரகாரம் சகல நிர்மாணங்களும் |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மெதிரிகிரிய வேதேஹபுற பல்நோக்குக் கட்டிடத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 500,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உரிய மேற்பார்வை உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீண்டும் தயாரிக்கப்படுகின்றது. |
| (i) | கூரைக்காக மேற்பட்டையுடன் மரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த அளவுகளில் ரீப்பை, மலசலகூட கதவு மற்றும் கூரை ஓடுகள் என்பன பயன்படுத்தப்படவில்லை. | | |
| (ii) | இரு பக்கமும் உள்ள தரையின் தடிப்பு அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் காணப்படவில்லை | | |
| (iii) | பெயர்ப்பலகைக்காக ரூபா 6,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெயர்ப்பதாதையொன்று காணப்படவில்லை. | | |
| (iv) | சுவர் கட்டும் போது செங்கற்களுக்குப் பதிலாக (புளொக்கல்) கொங்கிறீட் பெரிய கற்கள் பயன்படுத்தி நிர்மாணப் பணிகளைச் செய்ததன் காரணமாக ரூபா 34,765 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கேள்விப் பெறுமதியை விஞ்சி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் திம்புலாகல பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களில் ரூபா 104,574 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 119 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பணத்தை அறவிடல் மற்றும் தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உரிய உத்தியோகத்தருக்கு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு சமர்ப்பித்துள்ள கேள்விகளில் கணித ரீதியான பிழைகளைத் திருத்தும் போது அவ்வாறு அதிகரித்த பெறுமதிக்கு கேள்வி கையளிக்கப்பட்டதுடன் தேவையற்ற நட்டமொன்று எற்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவில் மக்களுக்கு நடமாடும் வீதி கூறொன்று ரூபா 1,959,698 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் நடமாடும் வீதிகளின் தேவை உறுதிப்படுத்தப்படாத எந்தவொரு நபரினாலும் பராமரிப்பு மற்றும் பயன்படுத்தப்படாத செயற்திட்டமாகக் காணப்பட்டது. | முறையான சாத்திய வள ஆய்வின் பின்னர் செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட வேண்டும். | நடமாடும் வீதிக் கூறை பயன்படுத்துவதற்கு பிரதேசத்தின் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) திம்புலாகல அலவாகும்புற இலக்கம் 07 காணி அருகிலுள்ள வீதியில் ரூபா 490,000 செலவில் மதகொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் ஓரங்கள் மற்றும் வடிகாண் என்பன தயாரிக்கப்படாமையின் காரணமாக வீதி பாரியளவில் உடைந்திருந்ததுடன் எந்தவொரு வாகனமும் பிரயாணம் செய்ய முடியாதிருந்தது. | மதகை நிர்மாணிப்பதற்கு இணைந்ததாக வடிகாண் அமைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது நிதிஏற்பாட்டை ஒதுக்கி அந்த வீதிப்பகுதி அபிவிருத்தி செய்யப்படும். |
| (இ) ரூபா 1,479,000 செலவில் லங்காபுற சோமபுற பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பொதுக் கிணறுகள் மற்றும் கரப்பந்து விளையாட்டு மைதானம் என்பன விளைவற்றுக் காணப்பட்டன. | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பொதுக் கிணறுகளுக்காக நீர் தாங்கி ஒன்றைப் பொருத்தி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வலை மேவுகை செய்து பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) எலஹெர பிரதேச செயலகத்தினால் முறையான சாத்தியவள ஆய்வு இல்லாமல் கட்டுக்கெலியாவ விகாரரை உள்ள பூமியில் | முறையளவு சாத்தியவள ஆய்வு செய்ய வேண்டிய மக்களின் தேவையினை | சீரற்ற நிலையாக இருந்த போதிலும் நெல் போக்குவரத்து செய்யப்படுகின்றது. |

| | |
|---|---|
| ரூபா 1,000,000 நிதியேற்பாட்டு பெறுமதி உடைய களமொன்று நீர்மாணிக்கப்பட்ட போதிலும் அந்த சதுப்பு நிலத்தில் நெல் போக்குவரத்து செய்தல் முடியாதிருந்தது. | இனங்கண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

**3.5 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது மெதிரிகிரிய பள்ளியகொடல்லே முதல் வடிங்கவெவ வரை யானை வேலி ஒன்றை நிர்மாணிக்கும் செயல்திட்டத்தில் 05 கிலோமீற்றர் தூரத்திற்கு வேலி நிர்மாணிக்காமையினால் அதற்குரிய ரூபா 1,229,965 தொகையான உபகரணங்கள் விளைவற்றுக் மெதிரிகிரிய சிவில் பாதுகாப்பு படையணியின் தலைமையகத்தின் பொறுப்பில் காணப்பட்டது. | மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த கால அட்டவணையில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மெதிரிகிரிய கலாச்சார நிலையத்தில் நடன மண்டபத்தை பழுதுபார்ப்பதற்காக கூரையைச் கழற்றி அகற்றியதன் பின்னர் ஒப்பந்தம் கைவிடப்பட்டமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 71,338 தொகை பயனற்றதாக இருந்தது. | பயனற்ற வகையில் அரசாங்கத்தின் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். | உரிய கட்டிடத்தை விரிவாக அமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்கான நிதியேற்பாடு மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் கட்டிடத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது |

**3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| லங்காபுர பௌத்தார்த கம ஸ்ரீ நலன்புரி சிறுவர் நிலையக் கட்டிடத்தில் கூரைக்கு 04 இரும்பு வளையங்கள் ரூபா 192,000 தொகையொன்று செலுத்தி வழங்கப்பட்ட போதிலும் 2018 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் அந்தக் வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிட்டின் பிரகாரம் குறித்த திகதியில் குறித்த வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதியேற்பாட்டை ஒதுக்கி கூரையின் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

**3.7 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச செயலகப் பரிவிற்கான சிறிய பிரமாண ஆடைகள் கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக எலஹெர பிரதேச செயலகத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 367,000 தொகையான நிதியேற்பாடு மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பன கைத்தொழிற்சாலை ஆரம்பிக்காமையின் காரணமாக பயனற்றுக் காணப்பட்டது. | நலன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்களை திட்டமிடுதலும் அமுல்படுத்துதலும் வேண்டும். | எதிர்காலத்தில் கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) தமன்கடுவ பிரதேச செயலனத்தின் மீள் கூட்டமைப்பு இலக்கிடப்பட்ட பொருளாதார வலுவைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரத்திற்கு இரண்டு நபர்களுக்கு ரூபா 100,670 தொகையான உபகரணங்கள் | செயல்திட்டத்தை ஆரம்பித்து நலன்களைப் பெற்றுக் கொள்ளும்வரை பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்கள் எற்றுக் கொள்ளப்படுவதுடன் தொடர்ந்து ஆராய்ந்து சீவனோபாய பணிகளை அமுல்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கும் அவ்வாறு இல்லையாயின் எதிர்காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | | பொருட்களை மீளப் பெற்று ஏனைய நலனாளிகளுக்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளர் தெரிவுபடுத்தியுள்ளார். |
| (இ) | ''கிராம சக்தி ஜனதா'' தொழில் முயற்சியின் கீழ் 07 பிரதேச செயலகப் பிரிவில் தாபிக்கப்பட்ட 23 கிராம சக்தி ஜனதா சங்கத்திற்காக சீவனோபாய அபிவிருத்தியின் கீழ் சிற்றின நிதி கடன் முறைமையை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 7,460,325 தொகை பயன்படுத்தப்படவில்லை. | செயல்திட்டத்தை ஆரம்பித்து நலன்களைப் பெற்றுக் கொள்ளும்வரை பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | சீவனோபாய அபிவிருத்தி நிதியத்தை செலவிடுவதற்காக சங்கத்தின் சிறு குழுக்கள் மற்றும் பகுதிகளின் கணக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டு இருந்தும் மேலும் சங்க உத்தியோகத்தருக்கு அறிவித்து செயற்திட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | 2017 இல் கித்துள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் லங்காபுர பிரதேச செயலகத்தினால் 20 கித்துள் தொகுதிகளில் 14 கருவிகள் நலனாளிகளுக்கு 09 மாத தாமதத்தின் பின்னர் பகிரிந்தளிக்கப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களுக்கு இணைந்ததாக கிந்துள் செயற்திட்டம் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பித்து அதன் விளைவுகள் பெறப்படும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கருவிகளைப் பெற்ற பயனாளிகள் சகலரையும் உரிய வேலையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

**3.8 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் எலஹெர பிரதேச செயலகத்தில் ரூபா 629,140 தொகையான வளிப்பதனாக்கி இயந்திரம் மற்றும் பொருத்திகளின் பெறுகை தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | வளிப்பதனாகி இயந்திரத்தைப் பொருத்துவதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 வழிகாட்டியின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் மூலம் பூங்கா மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் 02 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக கேள்வி சமர்ப்பிப்பதற்கு தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் போது ஆகக்குறைந்தது 21 நாட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய போட்டியாளர் கேள்வி சமர்ப்பிப்பதற்கு 21 நாட்கள் வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் உரிய சேவைகளை துரிதமாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தமையால் இவ்வாறு 21 நாட்களுக்கு குறைவான காலம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையினை அமைப்புகளுக்கு செயற்திட்ட ஒப்பந்தங்களை கையளிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய அமைப்பு மூன்று ஒப்பந்தங்களை விட அதிகமாக ஒரே தடவையில் ஒப்பந்தங்களைப் பெற்றிருக்க முடியாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக திம்புலாகல மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகங்களால் முறையே ரூபா 2,235,207 மற்றும் ரூபா 935,000 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் வீதம் 02 சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களைக் கையளிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய அமைப்பு 03 ஒப்பந்தங்களை விட அதிகமான ஒப்பந்த எண்ணிக்கையில் ஒரே தடவையில் ஈடுபட்டிருக்க முடியாது. | 01/2012 இன் 3.3 ஆம் பந்திக்கு முரணாக ஒரு சந்தர்ப்பத்தின் போது சமூக அமைப்பொன்றுக்கு 03 ஒப்பந்தங்களை விஞ்சி வழங்கப்படாதிருந்ததாக திம்புலாகல பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. |
| (ஈ) | மாவட்ட செயலகத்தினால் தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்காக பொது வசதிகளை தாபித்தல் மற்றும் மலசலகூட முறைமையினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டை விஞ்சி 22.27 சதவீதமான ரூபா 12,205,845 | அங்கீகரிக்கப்பட்ட நிச்சயமற்ற நிதி ஏற்பாட்டை விஞ்சி செல்லும் போது ஒப்பந்த முரண் கட்டளை அங்கீகாரத்திற்காக பெறுகை கைநூலில் குறிப்பிடப்பட்ட | வரையறுக்கப்பட்ட கூறுவிலை கோரல் முறையின் கீழ் 05 நிறுவனங்களுக்காக கேள்வி அழைப்பு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதில் 03 நிறுவனங்கள் மாத்திரம் கேள்வி ஆவணங்களைப் பெற்றிருந்தன. அதனிடையே |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான மேலதிக மதிப்பீட்டிற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.13.4 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் திகதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் காப்புறுதி நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அதிகாரத் தரப்பினருக்கு அனுப்பப்பட வேண்டும். செயலாற்றல் காப்புறுதி வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த திகதியின் பின்னர் 28 நாட்கள் வரை நீடிக்கப்பட வேண்டும். | 02 நிறுவனங்கள் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்ததுடன் ஒரு நிறுவனத்தின் கேள்வி காப்புறுதி ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிலிருந்து பெறப்பட்ட கேள்விக் காப்புறுதி ஆக இல்லாமையினால் அந்தக் கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட வேலைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்திற்கு அந்த கேள்விதாரரின் விலைக்குரிய பணிகளைச் செய்வதற்கு இணங்கி கேள்வி கையளிப்பதற்கு பெறுகைச்சபை தீர்மானித்திருந்தது. |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின். 5.4.8 வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி மற்றும் 5.4.4(i) வழிகாட்டியின் பிரகாரம் முற்பணம் செலுத்தும் காப்பீடொன்று பெறப்படாமல் திம்புலாகல பிரதேச செயலகத்தால் சமூக சேவைப் பிரிவின் மேல்மாடியை நிர்மாணிப்பதற்காக ரூபா 605,334 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த திகதியில் உள்ளவாறு ரூபா 713,553 பெறுமதியான வேலைப்பகுதி பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்படாத வேலைகளுக்கு ரூபா 118,800 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) இன் பிரகாரம் முற்பணம் செலுத்தும் காப்புறுதி பெறப்பட வேண்டும். அதில் 5.4.8 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த தொகையில் ஐந்து சதவீதத்திற்கு குறையாத தொகையொன்று செயலாற்றல் காப்பீடாக பெறப்பட வேண்டும். மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த திகதியில் குறித்த வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகங்களுக்குரிய 04 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகுதி வழிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெலிகந்த பிரதேச செயலக களஞ்சியத்தில் ஓவஹெட் புரொஜெக்டர் ஒன்றும் றோனியோ மெசின் ஒன்றும் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | வெலிகந்த பிரதேச செயலகத்திற்குரிய நவீன 10 டெக்டர் பவுச்சர்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு ஒரு வருடத்திற்கும் அதிகமாக காலமாக அலுவலக சுற்றாடலில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகை செய்யப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | ஹிங்குக்கொட பிரதேச செயலகத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்லமொன்று 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக கல்வி நிறுவனமொன்று நடத்திச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | வெலிகந்த எலஹெர, திம்புலாகல ஹிங்குராங்கொட பிரதேச செயலகங்களால் நிலையான சொத்துப் பதிவேடுகளில் சகல காணிகளினதும் கட்டிடங்களினதும் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்கள், உத்தியோகபூர்வ இல்லக் காணியும் கட்டிடமும் மதிப்பீடு செய்து சொத்தாக இனங்காணப்படாதிருந்தது டன் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக அவ்வப்போது செலவிடப்பட்ட ரூபா 64,954,771 தொகை மாத்திரம் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி இனங்காணப்பட வேண்டும். | சொத்துக்கள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.10 இழப்பு மற்றும் நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல பிரதேச செயலகத்தின் வளிப்பதனாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் போது இயந்திரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் மற்றும் ஏனைய மாதிரிகள் யாவும் ஒன்றுக்குச் சமமமாகக் காணப்படும் போது 24000 BTU இயலளவையுடைய இயந்திரத்திற்காக ரூபா 162,950 ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகரித்த விலையுடன் மாதிரியில் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 117,900 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு ஆகக்கூடிய நலன் பெறக்கூடிய முறையில் பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | கொள்வுனவு செய்யப்பட்ட சகல வளிப்பதனாக்கி இயந்திரங்களும் ஒரே வகையிலும் ஒரே சேவையை வழங்கும் முகவரிடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டமையால் சேவை பராமரிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காகவும் குறுங்கால பொருளாதார பாதகமொன்று காணப்பட்ட போதும் நீண்ட கால ரீதியில் மிகவும் உயர்ந்த பொருளாதார நலன்களும் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரங்களின் நீண்ட கால இருப்பு என்பவற்றை எதிர்பார்த்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | திம்புலாகல பிரதேச செயலத்தில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக வேலை செய்யப்பட்ட நாட்களை அடிப்படையாகக் கொண்டு | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும் கையொப்ப பதிவேட்டின் பிரகாரம் வேலை செய்யப்பட்ட நாட்களின் எண்ணிக்கையை விட மனித நாட்கள் 79 இற்காக ரூபா 75,181 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | லங்காபுர பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்த காலத்திற்காக முன்னாள் பிரதேச செயலாளரால் செலுத்த வேண்டிய ரூபா 25,764 தொகையான மின்சாரப் பட்டியல்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் மின்சார சபையினால் உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய மின்மானி கழற்றி எடுக்கப்பட்டமையினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் உரிய நிலுவைப் பணம் என்பன அறவிடப்படவில்லை. 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் இந்த உத்தியோகபூர்வ இல்லம் பயனற்றுக் காணப்பட்டமையினால் அதிலுள்ள உபகரணங்களுடன் இல்லம் அழிவிற்கு உட்படும் நிலையில் காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அந்த பிரதேச செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கும், அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை எதிர்காலத்தில் தகுதியான உத்தியோகத்தருக்கு குடியிருப்பிற்காக வழங்கும் வரை ஆதனத்தின் பாதுகாத்தலை பிரதேச செயலாளருக்கு கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | திம்புலாகல பிரதேச செயலக புதிய களஞ்சியக் கட்டிடம் நிர்மாணிக்கும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணமான ரூபா 20,978 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் இறுதிப் பட்டியலின் மூலம் நிறைவேற்றப்படாத 04 வேலை விடயங்களுக்காக | தாமதக் கட்டணம் மற்றும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 20 ஆந் திகதி வரை திகதி நீடித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 வரையிலும் வேலை நடவடிக்கைகளில் 95 சதவீதத்திற்கு அண்மித்த அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. சில பொருத்துதல்கள் எஞ்சியிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 324,341 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | | அவற்றை உலோக தொழில்நுட்ப வடிவமைப்பாளர்களின் வேலைத்தளத்திலும் தயாரிக்கப்பட்டமையால் அவற்றை பரிசோதனை செய்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டு 2019 சனவரி 15 ஆந் திகதி வரையிலும் உரிய பொருத்திகள் இணைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | மாவட்ட செயலத்தால் சனத்தொகை மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தின் விடுதிக்கு வளிப்பதனாக்கி இயந்திரத்தைப் பொருத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீடின்றி ரூபா 170,484 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சந்தை விலைகளைக் கவனத்தில் கொள்ளாமல் தொண்டர் அமைப்பிற்கு அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு வழங்கியதன் காரணமாக ரூபா 40,984 தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு ஆகக்கூடிய நலன்களைப் பெறும் வகையில் பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | வட மத்திய மாகாணத்தின் விலைகளின் பிரகாரம் இந்த வளிப்பதனாக்கி இயந்திரத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு 14 நாட்களுக்குள் செயல்முன்னேற்றம் சமர்ப்பிப்பதற்கு இருந்தமையால் நேர் ஒப்பந்த முறைமையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட சமூக அடிப்படையிலான அமைப்பிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இடத்தின் தன்மை மற்றும் ஏனைய பொருத்திகளின் துணைப்பாகங்கள் வேறுபட்டமையினால் கூறுவிலைகளும் வேறுபட்டிருந்தன. |
| (ஊ) | மாவட்ட செயலகத்திற்குரிய லொறி வண்டியொன்று விபத்திற்குட்பட்டிருந்தமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்தினால் ஏற்பட்ட ரூபா 1,027,750 தொகையான நட்டத்திற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தீர்மானிக்கப்படவில்லை. | மெய்மையாய்வை நடாத்தி நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மூன்று மாதங்களின் பூரண அறிக்கை சமர்ப்பித்து நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களி டமிருந்து அறவிடப்பட வேண்டும். | பரிசோதனை அறிக்கை அரச நிதிப் பணிப்பாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்திற்கான பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இயலளவுடைய 07 வளிப்பதனாக்கிகளுக்கு பதிலாக அதன் இரண்டு மடங்கு இயலளவுடைய 07 வளிப்பதனாக்கி இயந்திரங்களைப் பொருத்துதல் மற்றும் பொறியியல் மதிப்பீட்டை விஞ்சி இயந்திரமொன்று திட்டமிடல் பிரிவில் பொருத்தப்பட்டமையால் ரூபா 509,077 தொகையான தேவையற்ற செலவினப் பொறுப்பை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பணம் சிக்கனமாகச் செலவிடப்பட வேண்டியிருந்ததுடன் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | வெலிக்கந்த மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகங்களால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது பிரதேச செயலகத்தின் மூலம் உள்ளக இணைப்பு கற்களைக் கொள்வனவு செய்யாமல் ஒப்பந்தகாரரினாலேயே வழங்குவதற்கு சந்தர்ப்பமளித்து அதற்காக மாகாண விலைகளின் படி கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 3,134,751 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்திற்கு மிகவும் பொருளாதார நலனுடனான முறைமையொன்று பயன்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் அடிப்படையில் அது மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| (இ) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது திம்புலாகல பிரதேச செயலகத்தில் 09 வீதிகளுக்காக கொங்கிறீட் | அரசாங்கத்திற்க மிகவும் நலன்பெறக்கூடிய வகையில் செயற்திட்டங்களை அமுல்படுததுதல் வேண்டும். | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் விசேட நிசழ்ச்சித்திட்டம் 2018 இல் அமுல்படுத்தும் போது மாவட்ட பொறியியலாளரால் |

| | | | |
|---|---|---|---|
| | சிறு கற்கள் பதிப்பதற்காக ''சூகித்த புறவற'' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக ஒரு சதுரமீற்றருக்கு ரூபா 162 வீதம் ரூபா 385,690 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | வழங்கப்பட்டுள்ள விலையின் படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | எலஹெர கங்கேயாய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் கம்பி வலை வேலிக்காக நிர்மாணிக்கப்பட்ட பக்க சுவருக்காக செலவிடப்பட்ட ரூபா 100,491 தொகையான செலவினம் செயற்திட்டம் இடைநடுவே கம்பி வலை வேலி அமைக்கப்படுவதில்லை என தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக பயனற்றதாயிருந்தது. | திட்டங்களைத் தயாரிக்கும் போது உரிய தேவையினை இனங்கண்டு மிகவும் சரியாக திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | யானைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலி செயலிழந்து காணப்பட்டமையின் காரணமாக காட்டு யானைகள் இந்த விளையாட்டு மைதானம் ஊடாக பயணம் செய்கின்றது. அதனால் உத்தேச வேலி சேதமடைந்தமையினால் வேலி நிர்மாணிக்கும் முன்மொழிவு மாத்திரம் மாற்றப்பட்டிருந்ததுடன் பக்கச்சுவர் மூலம் விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் பிரதான வீதியிலிருந்து மழைநீர் வழிந்தோடிச் சென்று நெருக்கடிக் குள்ளாகியிருந்தது. |

## 3.12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(உ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான பிரகாரம் குறித்த கால எல்லையில் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்தபோதிலும், மீளாய்வாண்டிற்குரிய 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி வரை மாவட்ட செயலகத்திற்கு விநியோகிக்கப்பட்ட 07 கணக்காய்வு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 31(1)(உ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக குறித்த கால எல்லையில் பதிலளிக்கப்பட வேண்டும். | உரிய கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2019 மே 20 ஆம் திகதி பதிலளிக்கப்பட்டுள்ளது. |

ஐயவினாக்களுக்காக 2019 ஏப்ரல் 30 வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.13 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிங்குரங்கொட பிரதேச செயலகப் பிரிவில் குடியிருக்கும் இரண்டு நபர்களின் கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் காலாவதியாகியிருந்த போதிலும் தொடர்ந்தும் அந்த இடத்தில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அனுமதியற்ற கருங்கல் அகழ்வை தடைசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களை உரிய அமைச்சிற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | ஹிங்குரக்கொட பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி பிரதேச செயலாளருக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை | காணியை பிரதேச செயலகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கையேற்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. |
| (இ) | லங்காபுர முன்னாள் பிரதேச செயலாளரின் பொறுப்பில் காணப்பட்ட ரூபா 70,000 பெறுமதியான லெப்டொப் கணனி இயந்திரமொன்று அவர் இடமாற்றலாகிச் செல்லும் போது மீள அலுவலகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரதேச செயலகத்திற்கு பெற்றுக்கொள்வதற் கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | சனாதிபதி அலுவலத்தின் கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியின் கீழ் லங்காபுற தேவால கொடெல்ல விவசாய நீர் செயற்திட்டத்தின் மின்சார இணைப்பிற்காக தேவையான பொருட்கள் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், மின் இணைப்பு பெறப்படாமையினால் அந்த பொருட்கள் / உபகரணங்கள் பயனற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பித்து அதன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை தொடர்ந்தும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கித்துள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட 06 உபகரணத் | செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட பிரகாரம் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றே ாம். |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதிகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் தொண்டர் அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 387,886 தொகையான 318 பொருள் விடயங்கள் லங்காபுற பிரதேச செயலகத்தின் களஞ்சியத்தில் காணப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். | |
| (ஊ) | பூலஸ்திகம பொதுமக்கள் விளையாட்டரங்கில் பார்வையாளர் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படதிருந்ததுடன் 2017 இல் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகையான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் வடிகாண் அமைத்து கீழ் மாடியின் கொங்கீறீட் தட்டொன்று அமைக்கப்பட்ட போதிலும் பயன்படுத்தப்பட்ட இரும்பு கம்பி வெளியில் தெரிந்தமையின் காரணமாக துருப்பிடித்திருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். கட்டிடம் அழிவடைந்து செல்வதற்கு இடமளிக்காமல் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். | ஒரே தடவையில் நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் எதிர்பார்த்த நிதி ஏற்பாடு கிடைக்குமாயின் சகல வேலை நடவடிக்கை களையும் மேற்கொள்ள முடியும். |
| (எ) | கிராமிய பொருளாதார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,076,010 தொகையும் கொள்வனவு செய்யப்பட்ட 39 நீர்ப்பம்பிகளில் 12 இனைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகளை இனங்கண்டு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பகிர்ந்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஏ) | தமன்கடுவ பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய கோவை விடயத்திற்குரியதாக ஓய்வூதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் அதற்கான விடயம் தொடர்பாக பயிற்சியொன்று வழங்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | விடய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு உரிய விடயம் தொடர்பாக பயிற்சியை வழங்குவதன் மூலம் பொது மக்களுக்கு ஆகக்கூடிய சேவையொன்றை வழங்கக்கூடிய வகையில் மனித வள முகாமைத்துவம் | உத்தியோகத்தர் களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படல் வேண்டும். | |
| (ஐ) | எலஹெர மற்றும் அந்தனகடவல சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கி மூலம் 163 கணக்கு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 6,357,487 தொகையான கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | செலுத்துவதற்கு புறக்கணித்துள்ள கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஒ) | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதி 2008/14 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1.3.4 ஆம் பந்தியின் பிரகாரம் மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் காணியற்ற நபர்களைப் பதிவு செய்யும் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு அதன் பிரதியொன்று மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படவில்லை. | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1.3.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஓ) | மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்தனகடவல யாய 25-26 மற்றும் 25-12 அபவஹன எல வீதிக்காக 02 மதகுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்குரிய 73 தாமத நாட்களுக்காக ரூபா 290,544 தொகையான தாமதக் கட்டணம் இறுதிப் பட்டியலில் குறைக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமை மற்றும் தாமதக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | உரிய பிரிவிலிருந்து தகவல்களைப் பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஔ) | எலஹெர மற்றும் மெதிரிகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 18 வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் காணி வாடகை வருமானம் ரூபா 915,765 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை காணி வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்**

ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதிஏற்பாட்டை ஒதுக்குதல், பதவியணியினர்களுக்கு பயிற்சி மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களை தொடர்புபடுத்துவதற்காக போதியளவான கவனமொன்று மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. நல்லாளுகை**

**5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சமூக சேவைகள் அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட திம்புலாகல, மெதிரிகிரிய, எலஹெர, வெலிகந்த மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகப் பிரிவுகளில் சிறுநீரக படி செலுத்த வேண்டிய 341 நபர்கள், ஊனமுற்ற நபர்களில் 100 பேர், முதியோர் படியை எதிர்பார்த்த 1,951 பேர்கள் ஆகியோருக்கு காத்திருத்தல் பதிவேட்டில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | அதிக நலனாளிகளின் எண்ணிக்கைக்கு படியை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிஏற்பாட்டு எல்லைக்குள் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | ஹிங்குரக்கொட பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள 48 விகாரைகள், 18 பாடசாலைகள், 16 அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களுக்காகவும், லங்காபுற பிரதேச செயலகப் பிரிவில் 214 நிறுவனங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் 149 காணிக் கூறுகள் என்பவற்றுக்குரிய காணி கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | காணி கையளித்தல் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தினால் கையளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சனாதிபதியினால் கையொப்பமிடப்பட்ட | நலனாளிகளை இனங்கண்டு | மிகுதி செயற்பாடுகளுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | லங்காபுற பிரசே செயலகப் பிரிவிற்குரிய 292 உரித்துறுதிகள் மற்றும் 113 அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 25 உரித்துறுதி படி பத்திரங்கள் என்பவற்றை பகிர்ந்தளிப்பதற்கோ அல்லது இனங்காண முடியாத மற்றும் பிரச்சினைகளுள்ள உரித்துறுதி மற்றும் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பகிர்ந்தளிப்பதற்கு அல்லது இனங்காண முடியாத மற்றும் பிரச்சினைக்குள்ள உரித்துறுதிகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | காணி ஆணையாளர் 157 இன் பிரகாரம் லங்காபுற கிராம உத்தியோகத்தர் பிரிவில் 26 பதிவு செய்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 449 இலிருந்து எந்தவொரு நபருக்கும் காணி வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்துள்ள விண்ணப்ப தாரர்களுக்காக காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (உ) | தமன்கடுவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 189 கொட்டலீய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக கிடைத்த 27 முறைப்பாடுகளில் 17 முறைப்பாடுகள் தொடர்பாக எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | விசாரணையினை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்வாக உத்தியோகத்தரால் பரீட்சித்து மிகுதி சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஊ) | தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் படி பத்திரம் மற்றும் ஜயபூமி பத்திரங்களின் 559 பிரதிகள் அளவு அளவிடை செய்யாமலும் நில வரைபடங்களைப் பெற்றுக் கொள்ளாமல் வழங்கப்பட்டுள்ள படி பத்திரம் மற்றும் ஜயபூமி பத்திரங்களின் அளவு எவ்வளவு என இனங்கண்டு அதனை அளவிடுவதற்கும் | அளத்தல் கட்டளை மற்றும் வரைபடங்களைப் பெற்றுக் கொள்ளாமல் வழங்கப்பட்டுள்ள படிப் பத்திரங்கள் மற்றும் ஜயபூமி பத்திர எண்ணிக்கைகளை இனங்கண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான தீர்வு வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நில வரைபடங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவில் 263 - கறபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஏற்பட்ட திடீர் மினி சூறாவளி அனர்த்த நிலைமையினால் பாதிப்பிற்குள்ளான 09 வீடுகளுக்காக இழப்பீட்டுக் காப்புறுதிப் பணமான ரூபா 312,125 தொகை கிடைத்திருக்கவில்லை. | இழப்பு காப்புறுதிப் பணத்தை பெற்று பாதிப்புக்குள்ளாகிய வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடர் உதவிச் செயற்பாடுகளைச் செய்வதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | 2016 இன் 6 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் தாமதமின்றி கிடைக்க வேண்டியிருந்த போதிலும், வெலிகந்த பிரதேச செயலகத்தினால் அவ்வாறு தகவல்கள் வழங்கப்படாதிருந்த 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | 2016 இன் 16 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல் உத்தியோகத்தர்களினால் வாய்மொழி மூலம் வழங்கப்பட்ட தகவல்களில் தகவல் கோரிய தரப்பினர் திருப்திடைந்திருந்ததுடன் எழுத்து மூல தகவல்களை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. |
| (ஐ) | மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் எலஹெர பிரதேச செயலகப் பிரிவில் 828 காணிக் கூறுகளுக்கு உரியவர்களுக்காக 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட காணிக் கச்சேரிகளுக்குரிய காணிக் கூறுகளுக்கு உரியவர்களுக்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கச்சேரி நடாத்தி காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை முறைமைப்படுத்த வேண்டும். | காணி ஆணையார் நாயகத்திடமிருந்து அங்கீகாரம் கிடைத்த உடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஒ) | 2018 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் எலஹெர பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய அடையாள அட்டை இல்லாத 1,809 நபர்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்து | பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு பொதுமக்களைத் தொடர்புபடுத்தல் | நடமாடும் சேவை சிலவற்றையேனும் நடாத்தி அடையாள அட்டை இன்றிய நபர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. வேண்டும்.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகம் தொடர்பாக எந்தவொரு கணக்காய்வு ஐயவினாவேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சலக அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் பரீட்சிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காணப்படுவதன் காரணமாக கணக்காய்வு ஐயவினாக்களைச் சமர்ப்பித்தலில் குறைவொன்று காணப்படுகின்றது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் எலஹெர பிரதேச செயலகத்தில் 07 வருடங்களுக்கும் 25 வருடங்களுக்கும் இடையிலான காலம் சேவையாற்றுகின்ற 29 உத்தியோகத்தர்கள் காணப்பட்டனர். | தொடர்ச்சியான சேவைக் காலம் 05 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும். | இடமாற்றத்திற்காக விண்ணப்பித்துள்ள போதிலும், இதுவரையிலும் சாதகமான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. |